திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, சாலை விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தில் யாராவது போக்குவரத்துத் துறையில் வேலை கேட்டு மனுப்போட்டால் அதை அனுதாபத்தோடு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தகுதி சமமாக இருக்குமானால் அனுதாபத்தோடு அதைக் கவனிக்கும்.

திரு. நா. கணபதி : தலைவரவர்களே, இந்த விபத்துகளிலே ஏற்படுகின்ற உயிர்ச்சேதம், உடல் ஊனம் போன்றவைகளுக்கு என்று தனிப்பட்ட நீதி மன்றங்களும், மற்றவைகளுக்கு வேறு நீதி மன்றங்களும் இருக்கின்றன. இவைகளை மாற்றி ஒரே நீதி மன்றம் தீர்ப்பளிக்கக் கூடிய வகையில் சட்டத்தைத் திருத்த அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாவட்டத்திற்கு மாவட்டம் நீதி மன்றம் தான் இதைப் பற்றிப் பரிசீலிப்பதாக இங்கே என்னிடத்தில் உள்ள விவரங்களில் இருக்கின்றன. கனம் உறுப்பினர் சொன்ன கருத்தை ஆராய்ந்து சரி என்றால் ஏற்றுக் கொள்ளப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, பஸ்களையெல்லாம் இந்த அரசாங்கம் இன்ஷ்யூர் செய்கிறார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் ஆக்ஸிடெண்டு ரிசர்வ் பண்டு என்று வைத்து, ஒவ்வொரு பஸ்ஸுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாய் என்று போடப் படுகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்த மாதிரி விபத்துக்கள் தொழிற்சாலை நிறைந்த பகுதிகளில், பள்ளிக்கூட பகுதிகளில் அதிகமாக நிகழ்கின்றன. அந்தப் பகுதிகளில் செல்கின்ற வாகனங்கள் 15 மைலுக்கு மேல் நிச்சயமாக போகக் கூடாது என்பதற்கான ஆணையை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை சாலை விதிகளில் ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(அ) கவன ஈர்ப்பு அறிவிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

As the hon. Member Thiru A. Subramaniam is not in his seat, the calling attention notice given by him is deemed to have been withdrawn.